

# ஒரு குழந்தையின் சடலம்

ஷெகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத்,
த'வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத்,
அல்லாமா, மௌலானா அபூ பிலால்

**முஹம்மத் இல்யாஸ்**

அத்தார் காதிரீ ரளவீ

مُنّے کی لاش

*Munnay ki Laash*

# மரணித்த ஒரு குழந்தையின் சடலம்

இந்த சிறு நூல் ஷேகே தரீகத், அமீரே அஹ்லுஸ் ஸுன்னத், த.்.வதே இஸ்லாமியின் ஸ்தாபகர், ஹழ்ரத், அல்லாமா, மௌலானா **முஹம்மத் இல்யாஸ் அத்தார் காதிரி ரzஸவி** دَامَتْ بَرَكَاتُهُمُ الْعَالِيَه அவர்களால் உருது மொழியில் எழுதப்பட்டதாகும். மொழி பெயர்ப்பு மஜ்லிஸ் தமிழ் மொழியில் மொழி பெயர்த்துள்ளது. இதன் மொழி பெயர்ப்பிலோ அல்லது அச்சுக் கோவையிலோ ஏதாவது தவறுகள் தென்பட்டால் பின்வரும் முகவரியில் அமைந்துள்ள மொழி பெயர்ப்பு மஜ்லிஸோடு தொடர்பு கொண்டு நற்கூலியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**குறிப்பு** :- *இதில் வரும் ஷரீஆ சட்டங்கள் யாவும் ஹனஃபி மத்ஹபின் படியே எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*


**Translated into Tamil by:**

**Majlis-e-Tarajim (Dawat-e-Islami)**

Aalami Madani Markaz, Faizan-e-Madinah, Mahallah Saudagran, Purani Sabzi Mandi, Bab-ul-Madinah, Karachi, Pakistan

**UAN:** ☎ +92-21-111-25-26-92 – Ext. 7213

**Email:** ✉ translation@dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى سَيِّدِ الْمُرْسَلِيْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ ط بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ط

# புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ

இஸ்லாமிய புத்தகங்களையோ அல்லது பாடங்களையோ வாசிக்கும் போது பின்வரும் துஆவை ஓதிக்கொள்ளவும். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ, வாசிப்பவைகள் ஞாபகத்தில் இருக்கும்.

اَللّٰهُمَّ افْتَحْ عَلَيْنَا حِكْمَتَكَ وَانْشُرْ

عَلَيْنَا رَحْمَتَكَ يَا ذَاالْجَلَالِ وَالْاِكْرَام

யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! அறிவு ஞானத்தின் வாயிலை நமக்காக திறந்து விடுவாயாக. மேலும் நமக்கு ரஹ்மத்துடைய கதவுகளை திறந்து விடுவாயாக கண்ணியமும், உயர்வும் உடையவனே!

(அல்முஸ்தத்ர.்ப் பாகம் 1, பக்கம் 40 தாருல் .்பிக்ர், பேரூத்)

(ஆரம்பத்திலும், கடைசியிலும் ஒரு தடவை ஸலவாத் ஓதிக்கொள்ளவும்.)

# Maktaba-tul-Madina

**UK:** 80-82 Bordesley Green Road, Birmingham, B9 4TA.
Contact #: 07989996380 - 07867860092
Email: uk@dawateislami.net

**USA:** Faizan-e-Madina, P. O. Box 36216, Houston, Tx 77274.
Contact #: +713-459-1581, 832-618-5101

**INDIA:** 19/20 Muhammad Ali Road, Opposite Mandvi Post Office
Mumbai - 400 003.
Contact #: +91-022-23454429

**BANGLADESH:** K.M Bhovan, 1st Floor, 11, Andar Killa Chittagong.

**HONG KONG:** Faizan-e-Madina, M/F-75, Ho Pui Street, Tsuen Wan N.T.
Contact #: +85-98750884 – 31451557

**SOUTH AFRICA:** 61A, Mint Road, Fordsburg, Johannesburg.
Contact #: 011-838 9099

**KENYA:** Kanz-ul-Iman, Near Al-Farooq Hospital, Tonoka Area Mvita, Mombasa.
Contact #: +254-721-521916

**TORONTO CANADA:** 1060 Britannia Road Unit 20, 21 Mississauga ONT Canada.
Contact #: +141-664-82261

# உள்ளடக்கம்

## மரணித்த ஒரு குழந்தையின் சடலம்


புத்தகம் வாசிக்கும்போது ஓதும் துஆ ........ ii
ஸலவாத்தின் மகத்துவம் ........ 1
சிறு வயதில் நிகழ்ந்த ஏழு கராமத்துக்கள் ........ 4
கராமத் என்றால் என்ன? ........ 6
கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் காக்கை வலிப்பை குணமாக்கினார்கள் ........ 7
காக்கை வலிப்பு என்பது மோசமான ஒரு ஜின்னாகும் ........ 8
குழந்தைகளை காக்கை வலிப்பை விட்டும் பாதுகாப்பதற்கு ஒரு குறிப்பு ........ 8
கௌதுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் கிணறு ........ 9
நீரில் மூழ்கிய கல்யாண ஊர்வலம் ........ 10
ஒரு மனிதனால் மரணித்தவரை உயிர்ப்பிக்க முடியுமா? ........ 12
விஞ்ஞானிகளின் பார்வையில் ........ 14
மார்க்க விரோதியான கொலைகாரனுக்குத் தண்டனை ........ 15
70 முறை விந்து கழிதல் ........ 18
கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறியவைகள் ........ 19
அற்புதமான கராமத் ........ 20
கப்ருடைய வேதனையிலிருந்து விடுதலை ........ 22
மரணித்தவரின் கூச்சல் ........ 24





www.dawateislami.net

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِیْنَ وَالصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰی سَیِّدِ الْمُرْسَلِیْنَ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّیْطٰنِ الرَّجِیْمِ ؕ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ ؕ

# மரணித்த ஒரு குழந்தையின் சடலம்

ஷைத்தான் உங்களுக்கு எவ்வளவு சோம்பலை உண்டாக்கினாலும், நற்கூலியைப் பெறும் நல்லெண்ணத்துடன் இச்சிறுநூலை ஆரம்பம் முதல் கடைசி வரை வாசியுங்கள். اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ உங்களுக்கு கௌஸீல் அ.்.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَیْه அவர்கள் மீதுள்ள நன்மதிப்பு அதிகரித்து விடும்.

## ஸலவாத்தின் மகத்துவம்

மக்கத்து மாமன்னர், மதீனத்து மாவேந்தர் صَلَّی اللّٰهُ تَعَالٰی عَلَیْهِ وَاٰلِهٖ وَسَلَّم அன்னவர்கள் கூறினார்கள். “ஒரு முஸ்லிம் என் மீது ஸலவாத் சொல்லிக் கொண்டிருக்கும் காலமெல்லாம், மலக்குகள் அவர் மீது ரஹ்மத்துக்களை பொழிந்துக் கொண்டே இருப்பார்கள். இப்போது அதிகமாக கூறுவதும், குறைவாக கூறுவதும் அடியானின் விருப்பமாகும்.” (இப்னு மாஜா, பாகம் 1, பக்கம் 490, ஹதீஸ் 907, தாருல் ம.்.ரிபா, பேரூத்)

صَلُّوْا عَلَی الْحَبِیْب صَلَّی اللّٰهُ تَعَالٰی عَلٰی مُحَمَّد

பர்தா அணிந்த ஒரு பெண்மணி மகான்களின் தியான கூடத்தின் அருகே, தனது குழந்தையின் சடலத்தை நெஞ்சோடு அணைத்த நிலையில் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

அப்போது ஒரு சிறுவர் ஓடோடி வந்து அப்பெண்மணியிடம் அழுகைக்கான காரணம் என்னவென்று கேட்டபோது, அவள் பதிலளித்தாள். எனது மகனே! நான் கர்ப்பிணியாக இருக்கும்போது எனது கணவர் இவ்வுலகை விட்டும் பிரிந்து விட்டார். இக்குழந்தையே தனது தந்தையின் அடையாளமாகவும், எனது வாழ்க்கையாகவும் உள்ளார். இவர் திடீரென நோய் வாய்ப்பட்டு விட்டார். இவரின் சுகத்திற்காக இந்த தியான பீடத்துக்கு எடுத்து வரும்போது, வழியில் மரணித்து விட்டார். ஆனால் இன்னும் நான் நம்பிக்கையோடு உள்ளேன், ஏனென்றால் இந்த தியான பீடத்திலுள்ள மகானின் விலாயத்தைப் பற்றி எல்லா திசைகளிலும் பேசப்படுகிறது. அவர்களின் அருட்பார்வை யினால் எதுவும் சாத்தியமாகி விடும். ஆனால், இந்த பீடத்திலுள்ள மகான் அவர்கள் பொறுமையைக் கடைப் பிடிக்குமாறு அறிவுரைக்கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்கள் எனக் கூறி அப்பெண்மணி மீண்டும் புலம்பி அழத் தொடங்கி விட்டாள். அந்த சிறுவரின் மனம் இளகிப்போய், அவர் கீழ் வரும் கருணையான வார்த்தை களை, அதாவது உங்களுடைய குழந்தை இறக்கவில்லை, இன்னும் உயிரோடுதான் இருக்கிறது, அதோ பாருங்கள் அவர் அங்குமிங்கும் அசைகிறார் எனக்கூறினார்! கவலையோடு இருந்த அந்தத் தாய் உடனே எத்தகைய தயக்கமுமின்றி மரணித்திருந்த தனது குழந்தையின் மேல் போர்த்தியிருந்த போர்வையை நீக்கியதும், ஆச்சரியம் அவளை ஆற்கொண்டது. அவளது குழந்தை உயிரோடும், கைகால்களை அசைத்து விளையாடிக் கொண்டும்

இருப்பதைக் கண்டாள். அந்நேரத்தில் ஞானபீடத்திலிருந்த அந்த மகான் வெளியே வந்தார்கள். குழந்தை உயிருடன் இருப்பதைக் கண்டவுடன், அங்கே என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்துக் கொண்ட அவர்கள் தடியை எடுத்துக் கொண்டு, “இறைவன் தக்தீரில் எழுதி வைத்தவைகளை முன்கூட்டியே வெளிப்படுத்த நீர் தொடங்கி விட்டீர்” என்று கூறியவராக அச்சிறுவனை நெருங்கியபோது, அவர் அங்கிருந்து ஓட ஆரம்பித்தார், அந்த வயோதிபப் பெரியார் அவருக்கு பின்னால் ஓடினார்கள். அக்குழந்தை திடீரென மைய்யவாடியின் பக்கம் திரும்பி, மண்ணறை வாசிகளே! என்னை காப்பாற்றுங்கள்! என்று சத்தமிட்டது. அந்தப் பெரியார் மைய்யவாடியை அடைந்தவுடன், அங்கே 300 மண்ணறை வாசிகள் எழுந்து அக்குழந்தைக்கு காவலாக இருப்பதையும், அவர் ஒளி வீசும் முகத்துடன் புன்னகை யோடு நிற்பதையும் பார்த்து அதிர்ந்து விட்டார்கள். பின்பு அந்த பெரியார் அச்சிறுவனை பார்த்து, “மகனே! உங்களுடைய அந்தஸ்தை நம்மால் அடைய முடியாது, ஆகையால் நான் உங்கள் முன்னிலையில் சரணடைகிறேன்” என்று கூறினார்கள். (அல் ஹகாஇகு ∴பில் ஹதாஇக், பாகம் 1, பக்கம் 142)

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! அந்த சிறுவர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? அந்த சிறுவரின் பெயர் அப்துல் காதிர் என்பதாகும். பிற்காலத்தில் கௌஸுல் அ∴லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه என்ற திருநாமத்தினூடாகப் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்கள். மேலும் அந்த மகான் அவர்கள், கௌஸுல் அ∴லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் தாய்

வழிப்பாட்டனார் ஹழ்ரத் ஸய்யிதுனா அப்துல்லாஹ் ஸௌமஈ رَحۡمَةُ اللهِ تَعَالٰى عَلَيۡه ஆவார்கள்.

صَلُّوۡا عَلَى الۡحَبِيۡب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## சிறு வயதில் நிகழ்ந்த ஏழு கராமத்துக்கள்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! எங்களுடைய கௌஸுல் அஃலம் رَحۡمَةُ اللهِ تَعَالٰى عَلَيۡه அவர்கள் பிறப்பிலேயே வலியுல்லாஹ்வாக (அல்லாஹ்வின் இறைநேசராக) இருந்தார் கள்.

1. கௌஸுல் அஃலம் رَحۡمَةُ اللهِ تَعَالٰى عَلَيۡه அவர்கள் தாயின் கருவறையில் இருக்கும் போது தாய்க்கு தும்மல் ஏற்பட்டு اَلۡحَمۡدُ لِلّٰه என்று கூறினால், கருவறையில் இருந்துக் கொண்டே يَرۡحَمُكِ اللهُ என்று பதிலளிப்பார்கள். (அல் ஹகாஇகு ஃபில் ஹதாஇக், பக்கம் 139)

2. ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحۡمَةُ اللهِ تَعَالٰى عَلَيۡه அவர்கள் முபாரக்கான ரமழான் மாதத்தின் தலைப்பிறை, திங்கட் கிழமை, அதிகாலை நேரம் இவ்வுலகிற்கு வருகை தந்தார்கள். அப்போது அவர்களின் உதடுகள் இலேசாக அசைந்துக் கொண்டிருந்தன. அதிலிருந்து "அல்லாஹ் அல்லாஹ்" எனும் சத்தம் வெளியாகிக் கொண்டிருந்தது. (அல் ஹகாஇகு ஃபில் ஹதாஇக், பக்கம் 139)

3. ஸய்யிதுனா கௌஸீல் அ.ஃ.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் பிறந்த தினத்தில், அவர்கள் பிறந்த ஜீலான் ஷரீ.ஃ.பில் 1100 குழந்தைகள் பிறந்தார்கள். அவர்கள் அனைவரும் ஆண் பிள்ளைகளாகவும், வலியுல்லாஹ்வாகவும் (அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் இறைநேசர்கள்) ஆனார்கள். (தப்ரீஹுல் ஹாதிர், பக்கம் 15)

4. கௌஸீல் அ.ஃ.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் பிறந்தவுடனே நோன்பு நோற்றார்கள். சூரியன் மறைந்ததும் தன் தாயின் பாலை அருந்தினார்கள். முழு மாதமும் அவர்களுடைய رَحْمَةُ اللّٰهِ تَعَالٰی عَلَيْه வழமை இவ்வாறே இருந்தது. (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 172)

5. ஐந்து வயதாக இருக்கும் போது முதன் முதலில் بِسْمِ اللّٰهِ ஓதுவதற்காக ஒரு பெரிய மகானின் சன்னிதானத்தில் அமர்ந்த போது, اَعُوْذُ வையும் بِسْمِ اللّٰهِ வையும் ஓதிவிட்டு, சூரதுல் ஃ.பாத்திஹா இன்னும் الٓمّٓ இல் இருந்து ஆரம்பித்து 18ஆம் ஜீஸ்உ வரை புனித திருக்குர்ஆனை ஓதி முடித்தார்கள். அப்பெரியார் “மகனே! இன்னும் ஓதுங்கள்” என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், நான் இவ்வளவுதான் மனனம் செய்துள்ளேன் ஏனெனில் என் தாயாரும் இவ்வளவு தான் மனனம் செய்திருந்தார்கள். நான் என் தாயாரின் கருவறையில் இருந்த போது அவர்கள் 18ஆம் ஜீஸ்உ வரை ஓதுவார்கள். அதைக் கேட்டு நானும் அதே அளவு மனப் பாடம் செய்துக் கொண்டேன் எனக் கூறினார்கள். (அல் ஹகாஇகு ஃ.பில் ஹதாஇக், பக்கம் 140)

6. கௌஸீல் அ.்.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் சிறுவயதில் விளையாடுவதற்கு எண்ணம் கொள்ளும் போது, மறைமுக குரலைக் கேட்பார்கள், அதாவது அப்துல் காதிரே! رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه நாம் உம்மை விளையாடுவதற்காக படைக்கவில்லை. (அல் ஹகாஇகு ்.பில் ஹதாஇக், பக்கம் 140)

7. கௌஸீல் அ.்.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் மத்ரஸாவுக்கு செல்லும் போது, "அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் நேசருக்கு வழி விடுங்கள்" என்ற சத்தம் கேட்கும். (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 48)

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கராமத் என்றால் என்ன?

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் நேசர்களால் வெளியாகின்ற கராமத்துக்களை மனிதன் தம் சுய அறிவால் அவற்றை மதிப்பிட்டுப் பார்க்கும்போது, சிலசமயம் அவன் வழி தவறி விடுகின்றான். ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்! **கராமத்** என்பது மனிதனின் கற்பனையால் விளங்கிக் கொள்ள முடியாத ஒரு வெளிப் பாடாகும். அதாவது வெளிப்படையில், படைப்பினங்க ளால் அதனை வெளிப்படுத்துவது இயலாத ஒரு விடய மாகும். ஆனால் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் பேரருளினால் சங்கையான அவ்லியாக்கள் رَحِمَهُمُ اللهُ تَعَالٰى மூலமாக அப்படியான அற்புதங்கள் சிலசமயம் வெளியாகின்றன. நபித்துவத்தை அறிவிப்பதற்கு முன், ஒரு நபியின் மூலம் இப்படியான விடயங்கள் வெளியானால், அதற்கு **இர்ஹாஸ்** என்றும்

மேலும் நபித்துவத்தை அறிவித்ததன் பின் வெளியானால் அதற்கு **மு.:.ஜிஸா** என்றும் கூறப்படும். ஒரு மு.:.மினின் மூலமாக இப்படியான விடயங்கள் வெளியானால், அதற்கு **மஊனத்** என்றும் மேலும் வலியுல்லாஹ்வினால் வெளியானால் அதற்கு **கராமத்** என்றும் கூறப்படும். அதேபோல் ஒரு கா.:.பிரினால் அல்லது ஒரு பகிரங்கப் பாவியினால் வழமைக்கு மாற்றமான விடயங்கள் வெளியானால், அது **இஸ்தித்ராஜ்** என்று கூறப்படும். (பஹாரெ ஷரீஅத், பாகம் 1, பக்கம் 56,58 - மக்தBபதுல் மதீனா, Bபாபுல் மதீனா கராச்சி)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் காக்கை வலிப்பை குணமாக்கினார்கள்

ஒரு முறை ஸய்யிதுனா கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் சங்கை மிகுந்த சன்னிதானத்துக்கு ஒரு மனிதர் வருகை தந்து, பெரியவர்களே! தன்னுடைய மனைவிக்கு காக்கை வலிப்பு வந்து விட்டது என்பதாக முறையிட்டார். அப்போது கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறினார்கள்: “அவர்களுடைய காதிலே, பக்தாதை விட்டும் சென்று விடுமாறு கௌஸுல் அ.:.லம் அவர்கள் கட்டளையிடுகிறார்கள் என்று கூறி விடுங்கள்.” அவ்வாறு கூறியதும் உடனே அவர் குணமாகி விட்டார். (முலக்கஸ் அஸ் பஹ்ஜதுல் அஸ்ரார் லிஷ் ஷத்நூ.:.பி, பக்கம் 140,141 – தாருல் குதுபுல் இல்மிய்யா, பேரூத்)

## காக்கை வலிப்பு என்பது மோசமான ஒரு ஜின்னாகும்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! எனது எஜமான், அஃலா ஹழ்ரத், இமாமே அஹ்லுஸ் ஸுன்னத் மௌலானா ஷாஹ் இமாம் அஹ்மத் ரzஸாகான் عَلَيْهِ رَحْمَةُ الرَّحْمٰن அவர்கள் கூறுகிறார்கள்: காக்கை வலிப்பு மிகப் பயங்கரமான நோயாகும். இதற்கு “உம்முஸ்ஸிப்யான்” என்று சொல்லப் படும். (குழந்தைகளின் உருப்புக்களை எல்லா கோணங்களுக் கும் இழுத்து வதைக்கும் ஒரு நோயாகும்) குழந்தைகளுக்கு ஏற்பட்டால், இல்லையெனில் இது “ஸர்ஹ்” (காக்கை வலிப்பு) என்று அழைக்கப்படும். அனுபவ ரீதியாக உறுதியான விடயம் என்னவென்றால், 25 வயதுக்குக் கீழே உள்ளவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டால், அதை குணமாக்குவது சாத்தியமாகும். மேலும் 25 வயதுடையவர்களுக்கு அல்லது அதற்கு மேலுள்ளவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டால் அதை குணமாக்குவது இயலாத காரியமாகும். எனினும், ஒரு வலியுல்லாஹ்வின் கராமத்தினாலோ அல்லது ஒரு தஃவீzஸை அணிவதினாலோ அது முற்று முழுவதாக அழிந்து விட்டால் அது வேறு விடயம். எனவே, காக்கை வலிப்பு என்பது, உண்மையில் மனிதர்களுக்கு தொல்லை கொடுக்கும் ஒரு ஷைத்தான். (அதாவது குறும்புத் தனமான ஒரு ஜின்னாகும்)

## குழந்தைகளை காக்கை வலிப்பை விட்டும் பாதுகாப்பதற்கு ஒரு குறிப்பு

குழந்தை பிறந்த பின் அதான் கூறுவதை தாமதப்படுத்துவன் காரணத்தினால், இந்நோய் (காக்கை வலிப்பு) அதிகமாக

ஏற்படுகிறது. ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலாவதாக அதை குளிப்பாட்டி அதானும், இகாமத்தும் அக்குழந்தையின் காதிலே கூறப்பட்டால், اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ வாழ்நாளில் (காக்கை வலிப்பை விட்டும்) பாதுகாப்பு ஏற்படும். (மல்∴பூzஸாதே அ∴லா ஹழ்ரத், பக்கம் 417, மக்தBபதுல் மதீனா Bபாபுல் மதீனா – கராச்சி)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கௌதுல் அ∴லம் رَحْمَةُاللهِتَعَالٰىعَلَيْه அவர்களின் கிணறு

ஒருமுறை பக்தாத் நகரிலே கொள்ளை நோய் உண்டாகி பரவத் தொடங்கியது. மக்கள் இதனால் மரணிக்கத் தொடங்கினார்கள். அப்போது மக்கள் கௌதுல் அ∴லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் சமூகத்திற்கு வருகை தந்து, இந்த முஸீபத்தை விட்டும் பாதுகாப்பு வேண்டி நின்றார்கள். கௌதுல் அ∴லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், “என்னுடைய மத்ரஸாவைச் சூழவுள்ள பகுதியின் புற்களை சாப்பிடுங்கள், மேலும் என்னுடைய மத்ரஸாவின் கிணற்றிலுள்ள நீரை அருந்துங்கள். யார் இவ்வாறு செய்கின்றார்களோ اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ அவர்கள் அனைத்து நோய்களை விட்டும் நிவாரணம் பெறுவார்கள்.” என்று அறிவுரைக் கூறினார்கள். எனவே அந்தப் புல்லில் இருந்தும், கிணற்று நீரிலிருந்தும் நிவாரணம் கிடைக்கத் தொடங்கியது. எந்த அளவுக்கென்றால், கொள்ளை நோய் பக்தாதை விட்டும் முழுமையாக நீங்கி விட்டது. அதற்குப் பிறகு அது ஒரு போதும் திரும்பி வரவே இல்லை. (த∴ப்ரீஹுல் ஹாதிர் ∴பீ மனாகிபிஷ் ஷேக் அப்துல் காதிர், பக்கம் 43)

ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் கூறியதாக "தBபகாதுல் குBப்ராவில்" அறிவிக்கப்பட்டுள்ளது: "முஸ்லிமான ஒருவர் என் மத்ரஸாவின் பக்கமாக கடந்து செல்வாரேயானால் கியாம நாளின் போது அவரின் வேதனை குறைக்கப்படும்." (அத்தBபகாதுல் குBப்ரா லிஷ்ஷஹ்ரானி, பாகம் 1, பக்கம் 179 – தாருல் ஃபிக்ர் பேரூத்) அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.

**பாவமெனும் நோய்க்கும் நிவாரணம் தாருங்கள்**
**இப்பொழுதே ஷிஃபா தாருங்கள் கௌஸுல் அஃலம்**

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## நீரில் மூழ்கிய கல்யாண ஊர்வலம்

ஒரு முறை ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் நதிக்கரை வழியாக நடந்து சென்றுக்கொண்டிருந்த போது, ஒரு வயோதிபப் பெண் அழுதுக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அப்போது அவர்களின் ஒரு முரீத் (மாணவர்) கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களிடம், யா முர்ஷிதி! இந்த பெண்மணிக்கு ஒரேயொரு ஆண் மகன் இருந்தார். அவரைத் திருமணம் செய்துக் கொடுத்து, மணமகன் மணமகளை படகிலே அழைத்துக்கொண்டு இதே நதியில் ஊர்வலமாக வீடு திரும்பும் போது படகு நீரில் கவிழ்ந்து, மணமகன், மணமகள் உட்பட முழு ஊர்வலமும் நீரில் மூழ்கி விட்டது. இச்சம்பவம் நடந்து 12 வருடங்கள்

கடந்தும் கூட இவரின் துன்பம் தனிந்த பாடில்லை. இவர் ஒவ்வொரு நாளும் நதிக்கரைக்கு வந்து ஊர்வலம் இன்னும் வரவில்லையே என அழுது புலம்பி விட்டு செல்கிறார் என்று கூறினார். ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَیْه அவர்களுக்கு அப்பெண்மணி மீது கருணை ஏற்பட்டு, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் சன்னிதானத்தில் துஆவுக்காக கரங்களை ஏந்தினார்கள். சில நிமிடங்கள் வரை எதுவும் வெளியாக வில்லை. பின்பு இறைவனின் சன்னிதானத்தில் “யா அல்லாஹ் عَزَّوَجَلَّ! ஏன் இவ்வளவு தாமதம்?” என வினவினார்கள். அப்போது அறிவிக்கப்பட்டது, “எனது நேசத்துக்குரியவரே! இது விதிவசத்துக்கு மாற்றமான தாமதம் அல்ல. நாம் நாடியிருந்தால் كُنْ என்ற ஓர் உத்தரவின் மூலம் வானம், பூமி அனைத்தையும் படைத்திருப்போம். ஆனால் ஞான வெளிப்பாட்டுக்காக அவை ஆறு நாட்களில் படைக்கப்பட்டன. இந்தக் கல்யாண ஊர்வலம் மூழ்கி 12 வருடங்கள் ஆகின்றன. இப்போது அந்தப் படகும் இல்லை, அதில் பயணித்தவர்களும் இல்லை. நீர் வாழ் உயிரினங்கள் மனிதர்களின் சதைகளை தின்றுத் தீர்த்து விட்டன. உடல்களின் துண்டங்களெல்லாம் சேர்க்கப்பட்டு இப்போது உடல்களாக உருவாக்கப்பட்டு விட்டன. இதோ அவர்கள் வெளியாகும் நேரம் வந்து விட்டது.” அந்த வார்த்தைகள் முற்றுப்பெறக் கூட இல்லை, திடீரென அந்தப் படகு அதனுடைய அத்தனை அமைப்புடனும், மணமகன், மணமகள் உட்பட கல்யாண ஊர்வலத்தில் கலந்துக் கொண்டவர்கள் அத்தனைப் பேர்களுடனும் வெளியாகி, கொஞ்ச நேரத்துக்குள்

கரையை வந்தடைந்தது. படகில் வந்த அத்தனை மனிதர்களும் ஸய்யிதுனா கௌஸே அ'ளம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் துஆக்களைப் பெற்று மகிழ்வுடன் தம் இல்லம் போய் சேர்ந்தார்கள். இந்த கராமத்தை (அற்புதத்தை) கேள்வியுற்ற ஏராளமான நிராகரிப்பாளர்கள் கௌஸே அ'ளம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் அருள் மிகுந்த கரங்களினால் இஸ்லாத்தை தழுவிக் கொண்டார்கள். (சுல்தானுல் அத்கார் ஃபி மனாகிபி கௌஸில் அப்ரார், லிஷாஹி முஹம்மத் பின் அல்ஹம்தனி)

**மூழ்கியவர்களை வெளியாக்கினார்கள் அப்போது**

**இப்போது மூழ்குபவர்களை காப்பாற்றுங்கள் கௌஸே அ'ளம்**

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## ஒரு மனிதனால் மரணித்தவரை உயிர்ப்பிக்க முடியுமா?

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! நிச்சயமாக வாழ்வும், மரணமும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அதிகாரத்திலேயே உள்ளது. எனினும் அல்லாஹ் عَزَّوَجَلَّ தன் நல்லடியார்களுக்கு மரணித்தவரை உயிர்ப்பிக்கும் நல்லருளை நல்க வேண்டுமென நாடி விட்டால், அது அவனுக்குச் சிரமமான காரியமல்ல. மேலும் அல்லாஹ் عَزَّوَجَلَّ அல்லாத ஒருவராலும் மரணித்த ஒரு மனிதனை உயிர்ப்பிக்க முடியுமென நாம் எண்ணம் கொள்வோமேயானால் அது ஒரு போதும் நம் ஈமானை பாதிக்காது. ஆயினும் ஒருவன் ஷைத்தானின் தீய ஊசாட்டத்தின் மூலம் தனது உள்ளத்தில், அல்லாஹ் عَزَّوَجَلَّ மரணித்தவரை உயிர்ப்பிக்கும் ஆற்றலை யாருக்குமே வழங்க வில்லையென

நினைத்தால், அவன் நிச்சயமாக திருக்குர்ஆனின் அறிவிப்புக்கு மாற்றமாகி விடுகிறான். பாருங்கள்! ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா ரூஹுல்லாஹ் عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்கள் நோயாளிகளை குணப்படுத்தவும், மரணித்தவர்களை உயிர்ப் பிக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளார்கள் என திருக்குர்ஆன் தெட்டத்தெளிவாக கூறுகிறது. குர்ஆன் ஷரீ∴பின் மூன்றாம் பாகத்தில், சூரா ஆலிஇம்ரானின் 49-வது திருவசனத்திலே ஹழ்ரத் ஸய்யிதுனா ஈஸா عَلٰی نَبِیِّنَا وَ عَلَیْہِ الصَّلٰوۃُ وَالسَّلَام அவர்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டுள்ளது:

وَ اُبْرِئُ الْاَكْمَهَ وَ الْاَبْرَصَ وَ اُحْیِ الْمَوْتٰى بِاِذْنِ اللّٰهِ

**கன்Zஸுՙல் ஈமானின் பொருள்– பிறவிக் குருடனையும், வெண்குஷ்டரோகியையும் நான் குணப்படுத்துவேன், மேலும் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் நான் உயிர்ப்பிப்பேன்.** (சூரா ஆலிஇம்ரான்– வசனம் 49)

ஷைத்தானால் போடப்பட்ட ஊசாட்டம் அடியோடு அழிந்திருக்கும் என நினைக்கிறேன். ஏனென்றால் ஒரு முஸ்லிமுக்கு திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயத்திலும் உறுதியான நம்பிக்கை உண்டு. அதற்கு மாற்றமான எதையுமே அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார். அல்லாஹ் عَزَّوَجَلَّ தனது நல்லடியார்களுக்கு விதவிதமான ஆற்றல்களை கொடுத்துள்ளான். அல்லாஹ் عَزَّوَجَلَّ வினால் வழங்கப்பட்ட ஆற்றலைக் கொண்டு அவர்கள் எம் அறிவுக்கு அப்பாற்பட்ட அற்புதங்களை வெளிப்படச் செய்கிறார்கள்.

அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய நேசர்களின் வல்லமையின் ஆழத்தை உலக மக்களால் உணர்ந்துக் கொள்ள முடியாது என்பதில் எத்தகைய சந்தேகமும் இல்லை.

## விஞ்ஞானிகளின் பார்வையில்

முன்னனி விஞ்ஞானியாகப் பெயர் சூட்டப்பட்ட எல்பர்ட் அய்ன் ஸ்டைன் கூறுகிறார், நான் தொலை நோக்கியின் மூலம் பூமியிலிருந்து 20 மில்லியன் ஒளி வருடங்களுக்கு அப்பாலுள்ள பாமண்டலத்தைப் பார்த்தேன். ஒரு செக்கனில் 1 இலட்சத்து 86 ஆயிரம் மைல் வேகத்தில் செல்லும் ஒளி, 20 மில்லியன் வருடத்தின் பின்னரே அவ்விடத்தைச் சென்றடையும். மேலும் ஒரு மில்லியன் (பத்து இலட்சம்) வருடம் நான் வாழ்ந்து முடித்தாலும் இந்த பிரபஞ்சத்தின் முடிவு எங்கே இருக்கிறது என்பதை என்னால் கண்டு பிடித்து விட முடியாது.

விஞ்ஞானிகளுக்கு நேர்மாற்றமாக அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் இறைநேசர் ஸய்யிதுனா கௌஸீல் அ.:.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களுடைய பார்வையின் அந்தஸ்த்தைப் பாருங்கள். அவர்கள் கூறுகிறார்கள்:

نَظَرْتُ اِلٰى بِلَادِاللهِ جَمْعًا كَخَرْدَلَةٍ عَلٰى حُكْمِ التِّصَالِ

(அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் நகரங்கள் யாவும் என் உள்ளங்கையில் ஒரு கடுகு போலவே காட்சி அளிக்கின்றன.)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## மார்க்க விரோதியான கொலைகாரனுக்குத் தண்டனை

ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَیْه அவர்களது வஃபாத்திற்கு நீண்ட காலத்துக்குப் பின், ரஞ்ஜீத் சிங்குடைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் நடந்த ஈமானை உற்சாகப் படுத்தும் இந்த சம்பவத்தைக் கேட்டு பயனடையுங்கள். அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் இறைநேசர்களின் கராமத்துக்களில் எத்தகைய நம்பிக்கையுமற்ற ஒரு முஸ்லிம் இருந்தான். அவன் திருமணமான ஓர் இந்து பெண் மீது காதல் வசப்பட்டான். ஒரு முறை அப்பெண்ணின் கணவன் அவளது பெற்றோர் வீட்டுக்கு அவளை அழைத்துச் செல்லும் போது, இச்சை வயப்பட்ட இவன், அவர்களுக்குப் பின்னால் சென்று, மக்கள் நடமாற்றமற்ற ஓரிடத்தில் அவர்களை சந்தித்தான். அவர்கள் இருவரும் நடந்து சென்றுக் கொண்டும், அவன் குதிரையிலும் இருந்தான். மேலும் அவன் கவலைக் கொள்வது போல், பொய்யான இரக்கத்தோடு அவர்கள் இருவரையும் தன் குதிரையில் அமருமாறு கூறினான். ஆனால் அந்த இந்து மனிதர் மறுத்து விட்டார். அப்போது அந்தக் காதலன் பின்னால் உட்கார்ந்து வர உன் மனைவிக்கு அனுமதி கொடு இல்லையெனில் அவள் மிகவும் களைத்து விடுவாள் என்று கூறினான். அந்த இந்து மனிதனுக்கு அவனின் தீய எண்ணங்கள் விழங்கி விட்டது. அவர் கூறினார், எத்தகைய தீங்குமில்லாமல் என் மனைவியை வீட்டுக்கு கொண்டு போய் சேர்ப்பதற்குரிய உத்தரவாதத்தைக் வழங்குவாயாக! அப்போது அவர் “இந்தக் காட்டில் நான் எங்கு போய் உத்தரவாதம் கொண்டு

வருவது?” என்று கேட்டார். உடனே அந்தப் பெண்மணி “முஸ்லிம்கள் ஸய்யிதுனா கௌஸீல் அஃலம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களை அதிகமாக விரும்புவார்கள். நீங்கள் அவர்களையே எங்களுக்கு உத்தரவாதமாகக் கூறுங்கள் என்று கூறினார். இவனுக்கு கௌஸீல் அஃலம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களிடம் எத்தகைய நம்பிக்கையும் இல்லா விட்டாலும் கூட, ஆம் என்னு கூறுவதால் ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை என எண்ணிக் கொண்டு, அவன் வாக்குறுதி அழித்து விட்டான். அப்பெண்மணி குதிரையில் ஏறியதும் அக்கொடியோன் அவனது வாளினால் அவளது கணவனின் தலையை வெட்டி வீழ்த்தி விட்டு, குதிரையை எவ்வளவு வேகமாக செலுத்த முடியுமோ அவ்வளவு வேகமாகச் செலுத்தினான். மிகவும் கவலையடைந்த அப்பெண்மணி திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள். அந்தக் காதலன், “நீ திரும்பி திரும்பி பார்ப்பதால் எதுவும் ஏற்படப் போவ தில்லை. உன்னுடைய கணவன் திரும்பி வர மாட்டான்.” எனக் கூறினான். அந்தப் பெண்மணி பதிலளித்தாள், நான் இறைநேசர்களின் அரசரைத் தேடுகிறேன். இதைக்கேட்ட அந்தக் காதலன் சிரித்துக்கொண்டே, இறைநேசர்களின் அரசர் மரணித்து பல வருடங்களாகின்றன. இப்போது அவர்கள் எங்கிருந்து வருவார்கள்! என்றுக் கேட்டான். அவன் இதைக்கூறி முடிக்கும்போதே இரண்டு மகான்கள் அங்கே தோன்றினார்கள். அவர்களில் ஒருவர் அந்த மார்க்க விரோதியான கொலைக்காரனின் தலையை வெட்டி னார்கள். பின்பு அந்தப் பெண்ணையும் குதிரையையும்

அவளது கணவன் இறந்து விழுந்திருந்த இடத்துக்கு அழைத்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் தலையை எடுத்து தோள்களோடுப் பொருத்தி "قُمْ بِاِذْنِ اللّٰهِ" அதாவது அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் உத்தரவுக் கொண்டு எழும்பு என்றுக் கூறினார்கள். அக்கணமே அந்த இந்து மனிதர் உயிர் பெற்று எழுந்தான். இச்சம்பவத்தைத் தொடர்ந்து அந்த மகான்கள் மறைந்து விட்டனர். அந்தக் கணவனும் மனைவியும் கொலை செய்யப்பட்டவனின் குதிரையிலேயே வீடு வந்து சேர்ந்தனர். அந்தக் கொலை செய்யப்பட்ட காதலனின் உறவினர்கள் குதிரையை அடையாளங் கண்டு, குதிரை வந்துள்ளது ஆனால் அதில் போனவர் இல்லை, அவரை இந்த ஜோடியே கொன்றொழித்திருக்க வேண்டும் என ரன்ஜீத் சிங்கிடம் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர். வழக்கு மன்றத்தின் முன்னால் காட்டில் நடந்த சம்பவம் அனைத்தையும் எடுத்துக் கூறிவிட்டு, அங்கு வருகை தந்த அந்த இரண்டு மகான்களில் ஒருவர் இப்போது புகழ் பெற்ற மஜ்துாபிகளில் ஒருவரான Gகுல் முஹம்மத் ஷாஹ் ஸாஹிபைப் போன்றிருந்தார் என்றும் கூறினார்கள். அப்போது வழக்கு மன்றத்தினால் Gகுல் முஹம்மத் ஷாஹ் ஸாஹிபை அங்கு அழைக்கப்பட்டது. அவர்கள் வந்து வார்த்தைக்கு வார்த்தை நடந்த சம்பவங்கள் அனைத்தையும் எடுத்துக் கூறினார்கள். இதைக்கேட்ட அனைத்து மனிதர்களும் கௌஸீல் அ.:.லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் புத்துயிரூட்டும் இந்த கராமத்தைக் கேட்டு அதிசயமடைந்தார்கள். ரன்ஜீத் சிங் வழக்கை முடித்துவிட்டு அந்த கணவன், மனைவி இருவருக்கும்

பரிசளித்து கௌரவப்படுத்தி அனுப்பி வைத்தார். (அல் ஹகாஇகு ஃபில் ஹதாஇக், பக்கம் 95)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## 70 முறை விந்து கழிதல்

ஹழ்ரத் ஸய்யிதுனா கௌதுல் அஃலம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் முரீதீன்களில் ஒருவருக்கு ஒரே இரவு கனவில், பல்வேறு பெண்களோடு 70 முறை விந்து கழிதல் ஏற்பட்டது. காலையில் குளித்து விட்டு தனது முர்ஷித் (ஷேக்) ஸய்யிதுனா கௌஸீல் அஃலம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களிடம் இரவு நடந்த சம்பவத்தை சொல்வதற்காக சென்றார்கள். அவர் சொல்வதற்கு முன்னரே ஸய்யிதுனா கௌஸீல் அஃலம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், “நேற்று இரவு நடந்த சம்பவத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். நான் இரவு லௌஹீல் மஹ்ஃபூலை (விதிவசப் பட்டோலையை) நோட்டமிட்டேன். அதில் நீங்கள் 70 பெண்களோடு தகாத உறவுக் கொள்வீர்களென விதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் சன்னிதானத்தில் உங்களின் விதியை மாற்றும் படியும், இந்தப் பாவங்களிலிருந்து பாதுகாக்கும் படியும் பிரார்த்தனைப் புரிந்தேன். ஆகவே இந்த அனைத்து விடயங்களையும் கனவில் கழிதலாக மாற்றப்பட்டு விட்டது” என்றுக் கூறினார்கள். (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 193)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## கௌஸுல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறியவைகள்

இனிமையான இஸ்லாமிய சகோதரர்களே! ஒரு முர்ஷிதே காமிலிடம் (சம்பூரணத்துவம் பெற்ற இறைநேசரிடம்) Bபைஅத் கட்டாயம் செய்ய வேண்டுமென்பதை இதிலிருந்து நாம் விளங்கிக் கொண்டோம். ஏனெனில் முர்ஷிதின் கண்காணிப்பால் முஸீபத்துக்கள் நீங்குவதோடு, சில சமயம் கடுமையான ஆபத்துக்களும் இலேசானவைகளாக மாற்றம் பெற்று விடுகின்றன.

“Bபஹ்ஜதுல் அஸ்ராரில்” குறிப்பிடப்பட்டுள்ளது: அவ்லியாக் களின் தலைவராகிய, குத்பே ரBப்பானி, மஹ்Bபூபே ஸுBப்ஹானி, கின்Dதீலே நூரானி, அஷ்ஷேக் அபூ முஹம்மத் ஸய்யித் அப்துல் காதிர் ஜீலானி رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் கூறியுள்ளார்கள்: எனக்கு மிகப் பெரிய பதிவுப் புத்தகம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் என் தோழர்களினதும், கியாம நாள் வரையுள்ள எனது முரீதீன்களினதும் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள் எனக் கூறப்பெற்றுள்ளேன். மேலும் அவர்கள் கூறுகிறார்கள், நான் நரகத்தின் காவலரிடம் “என்னுடைய முரீதீன்களில் யாராவது நரகில் இருக்கின்றார்களா?” என்று கேட்டேன். அவர் இல்லை என்று பதிலளித்தார். கௌஸீல் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள் மேலும் கூறினார்கள், நான் அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன், எப்படி வானம் பூமியை கவிழ்ந்துக் கொண்டுள்ளதோ அதேபோல் என் உதவிக் கரங்கள் என் முரீதீன்களைக் கவிழ்ந்துக் கொண்டுள்ளன. என்னுடைய

முரீதீன்கள் நல்லவர்களாக இல்லாவிட்டாலும் اَلْحَمْدُ لِلّٰه عَزَّوَجَلَّ நான் நல்லவனாக உள்ளேன். என்னைப் படைத்த அந்த ஒருவனின் மீது ஆணையாக, என்னுடைய அத்தனை முரீதீன்களும் சுவனம் நுழையும் வரை என்னுடைய இறைவனின் சன்னிதானத்தை விட்டும் நான் பிரிய மாட்டேன். (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 193)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللّٰهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## அற்புதமான கராமத்

அபுல் முள..்ப்பர் ஹஸன் என்ற ஒரு வியாபாரி ஹழ்ரத் ஸய்யிதுனா ஷேக் ஹம்மாத் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களின் சன்னிதானத்துக்குச் சென்று, கண்ணியத்துக்குரியவரே! வர்த்தகப் பொதிகளைச் சுமந்த பிரயாணக் கூட்டத்தோடு வியாபாரத்திற்காக சிரியாவுக்கு போகவுள்ளேன், எனக்காக துஆ செய்யுங்கள் எனக் கூறினார். ஸய்யிதுனா ஷேக் ஹம்மாத் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் பதிலளித்தார்கள், “அந்தப் பயணத்துக்கான உங்களது திட்டத்தை உடனே இரத்து செய்யுங்கள். அப்படி செல்வீர்களானால், கொள்ளைக் கூட்டத்தினர் உங்கள் பொருட்களையும் கொள்ளையடித்து, உங்களையும் கொன்று விடுவார்கள்.” இதைக்கேட்ட அந்த வர்த்தகர் திகைத்துப் போய் கவலையோடு திரும்பும் போது, வழியிலே ஸய்யிதுனா கௌஸுல் அ..்லம் رَحْمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيْه அவர்களை சந்தித்த வேளையில் ஏன் கவலையோடு இருக்கின்றீர்கள்? என்று கேட்டார்கள். அவர் நடந்த சம்பவத்தை எடுத்துக் கூறினார். அப்போது கௌஸுல்

அ.ஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், கவலைப்படாதீர்கள், உற்சாகத்தோடு சிரியாவுக்குப் பயணியுங்கள் اِنْ شَآءَاللّٰه عَزَّوَجَلَّ எல்லாமே சிறப்பாக முடியும் எனக்கூறினார்கள். அவர் பிரயாணக் கூட்டத்தோடு சிரியா நோக்கிப் பயணமானார். வர்த்தகம் மிக இலாபகரமாக அமைந்தது. 1000 தங்கக் காசுகள் நிறைந்த பணப்பையோடு சிரியாவின் “ஹல்ப்” நகரை அடைந்தார். துரதிஷ்டவசமாக பணத்தின் பையை மறதியாக எங்கோ வைத்து விட்டு, அதே கவலையோடு அயர்ந்து தூங்கி விட்டார். கனவில் கொள்ளைக் கூட்டமொன்று இவரது வியாபாரப் பயணிகளைத் தாக்கி, எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு இவரையும் கொன்று விட்டுப் போய் விடுவதாக காண்கிறார்! பயத்தின் காரணத்தால் இவரது கண்கள் விழித்துக் கொண்டன. பயத்தோடு எழும்பிப் பார்த்த போது, அவரைச் சூழ கொள்ளைக் கூட்டமோ அல்லது எத்தகைய அசம்பாவிதமோ தென்படவில்லை. திடீரென அவருக்கு காசுகள் நிறைந்த பணப் பையை வைத்த இடம் ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவ்விடத்துக்குச் சென்று அவற்றைக் எடுத்துக்கொண்டு, மகிழ்ச்சியாக பக்தாத் ஷரீ.ஃபுக்கு திரும்பிய பிறகு, முதலில் கௌஸீல் அ.ஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களை சந்திப்பதா அல்லது ஷேக் ஹம்மாத் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களை சந்திப்பதா எனத் தடுமாற்றம் ஏற்பட்டது. தற்செயலாக வழியிலேயே ஷேக் ஹம்மாத் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களைக் காண நேர்ந்தது. ஷேக் ஹம்மாத் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அவரைக் கண்டவுடன் கூறினார்கள்: “முதலில் கௌஸீல் அ.ஃலம் رَضِيَ اللهُ تَعَالٰى عَنْهُ

அவர்களைச் சந்தியுங்கள், ஏனெனில் அவர்கள் இறைவனின் நேசர் ஆவார்கள். அவர்கள் உங்களுக்காக 17 முறை துஆ கேட்டார்கள். இதனால்தான் நான் உங்களுக்குக் கூறிய அந்த விதியையே அல்லாஹ் عَزَّوَجَلَّ மாற்றி அமைத்து விட்டான். கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்களின் பிரார்த்தனையின் பரகத்தால், எது உமது உண்மை வாழ்வில் நடக்க இருந்ததோ, அல்லாஹ் عَزَّوَجَلَّ அதனை கனவின் மூலம் நடத்தி முடித்து விட்டான்.'' வர்த்தகர் கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்களின் சன்னிதானத்தை அடைந்தார். அவரைக் கண்டவுடன் கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்கள், ''உண்மையில் உங்களுக்காக நான் 17 முறை துஆ செய்தேன்'' என்று கூறினார்கள். (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 64) **அல்லாஹ் عَزَّوَجَلَّ வுடைய பேரருள் அவர்கள் மீது பொழியட்டும், அவர்களின் பொருட்டால் கேள்வி, கணக்கின்றி நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படட்டும்.**

صَلُّوْا عَلَى الْحَبِيْب     صَلَّى اللهُ تَعَالٰی عَلٰی مُحَمَّد

## கப்ருடைய வேதனையிலிருந்து விடுதலை

ஓர் இளைஞர் மிகவும் கவலையோடு ஸய்யிதுனா கௌஸுல் அ.:.லம் رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்களிடம் வந்து முறைப்பட்டார். கண்ணியம் மிக்கவர்களே! என் தந்தையை நான் இரவு கனவிலே கண்டேன். அவர்கள் என்னிடம், ''மகனே! நான் கப்ரில் வேதனை செய்யப்படுகிறேன். நீங்கள் ஸய்யிதுனா ஷேக் அப்துல் காதிர் ஜீலானி رَحْمَةُ اللهِ تَعَالٰی عَلَيْه அவர்களின்

சன்னிதானத்துக்குப் போய் அவர்களிடம் எனக்காக துஆ செய்யுமாறு கூறுங்கள்” எனக்கூறினார். இதைக் கேட்டவுடன், பக்தாதின் தலைவர், கௌஸே் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் அந்த இளைஞரிடம், உன் தந்தையார் எப்போதாவது என் மத்ரஸாவுக்குப் பக்கமாக நடந்து சென்றுள்ளாரா? என்று கேட்க, ஆம் என்று அவர் பதிலளித்தார். ஸய்யிதுனா கௌஸே் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள் மௌனமானார்கள். அந்த இளைஞர் திரும்பி சென்று விட்டார். அடுத்த நாள் அந்த இளைஞர் மிகவும் மகிழ்ச்சியோடு திரும்பி வந்து, **யா முர்ஷித்!** இன்றிரவு என் தந்தை பச்சை நிற ஆடையை அணிந்தவராக மீண்டும் என் கனவிலே வந்தார்கள். அவர்கள் மிக மகிழ்வோடு இருந்தார்கள். மேலும் என்னிடம், “மகனே! ஸய்யிதுனா ஷேக் அப்துல் காதிர் ஜீலானி قُدِّسَ سِرُّهُ الرَّبَّانِي அவர்களின் பரக்கத்தால் என்னுடைய வேதனை நீக்கப்பட்டு, எனக்கு இந்தப் பச்சை நிற ஆடையும் வழங்கப்பட்டது. என் அருமை மகனே! நீ கௌஸே் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்களது சன்னிதானத்திலே இருந்து விடு.” என்று கூறினார். இதைக் கேட்ட ஸய்யிதுனா கௌஸே் அஃலம் رَحْمَةُ اللهِ تَعَالٰى عَلَيْه அவர்கள், என்னுடைய மத்ரஸாவுக்குப் பக்கத்தால் நடந்து செல்கின்ற ஒரு முஸ்லிமின் வேதனையை குறைப்பதாக இறைவன் எனக்கு வாக்குறுதி தந்துள்ளான் என்று கூறினார்கள். (பஹ்ஜதுல் அஸ்ரார், பக்கம் 194)

صَلُّوْا عَلَى الْحَبِيْب صَلَّى اللهُ تَعَالٰى عَلٰى مُحَمَّد

## மரணித்தவரின் கூச்சல்

ஒரு முறை ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحۡمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيۡه அவர்களிடம் சில மனிதர்கள் வந்து, அல்லாஹ் عَزَّوَجَلَّ வின் நல்லடியாரே! நாங்கள் Bபாபுல் "அZஸஜ்" மைய்யவாடியின் ஒரு கப்ரிலிருந்து மரணித்தவரின் அலறல் சப்தத்தைக் கேட்கிறோம். கண்ணியம் மிக்கவர்களே! அவரின் தண்டனை நீங்குவதற்கு தாங்கள் கொஞ்சம் கருணை செய்யுங்களேன் என்றுக் கூறினார்கள். அவர்கள் رَحۡمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيۡه மக்களிடம் அவர் என் முரீதீன்களில் ஒருவரா? எனக் கேட்டார்கள். எங்களுக்குத் தெரியாது என மக்கள் பதிலளித்தனர். என்னுடைய மஜ்லிஸுக்கு அவர் வந்துள்ளாரா? எனக் கேட்டார்கள். நமக்கு அதைப்பற்றி தெரியாது என பதிலளித்தனர். அவர் எப்போதாவது என் உணவை உண்டுள்ளாரா? எனக் கேட்டார்கள். இதுவும் எங்களுக்குத் தெரியாது என பதிலளித்தனர். எப்பொழுதாவது அவர் என் பின்னால் நின்று தொழுதுள்ளாரா? எனக் கேட்டார்கள். மக்கள் அதற்கும் அதே பதிலையே கூறினார்கள். ஸய்யிதுனா கௌஸுல் அஃலம் رَحۡمَةُ اللّٰهِ تَعَالٰى عَلَيۡه அவர்கள் தங்களது அருள் மிகுந்த தலையைத் தாழ்த்தினார்கள். வல்லமையினதும் மகத்துவத்தினதும் அடையாளங்கள் வெளியாகின. சற்று நேரத்தின் பின் அவர்கள் கூறினார்கள். "மலக்குமார்கள் இப்பொழுது எனக்கு அறிவித்தார்கள்: அதாவது அவர் உங்களை பார்த்திருக்கிறார் மேலும் உங்கள் மீது அன்பும் வைத்திருந்தார். ஆகவே அல்லாஹ் عَزَّوَجَلَّ அவர் மீது கருணைக் காட்டினான்." اَلۡحَمۡدُ لِلّٰهِ عَزَّوَجَلَّ அவருடைய கப்ரிலிருந்து அலறல் சத்தம் நின்று விட்டது. (பஹ்ஜதுல் அஸ்ரார் லிஷ் ஷத்நூஃபி, பக்கம் 194)